**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No. 188/2018 | Date | : | 12.06.2026 |
| Deposition of Witness for | : | அ.சா.1 | Taluk | : | |
| Name | : | வெங்கடேஷ்வரன் | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 12.06.2026

(1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். ).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் ஈரோடு நசியனூர் சாமி கவுண்டன் பாளையத்தில் குடியிருந்து ஈரோட்டில் ஷிஹா பெட்டல்ஸ் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எனது பெற்றோர்கள் இருவரும் சாமி கவுண்டம்பாளையம் மெயின் வீதியில் வசித்து வருகிறார்கள் நான் தினமும் வேலைக்கு செல்லும்போது அவர்களை பார்த்து விட்டு செல்வேன். கடந்த 13.04.2018 ஆம் தேதி நான் அவர்களை பார்த்துவிட்டு வேலைக்கு வந்து விட்டேன். அன்றைய தினம் பகல் சுமார் 02.00 மணி அளவில் எனது பெற்றோர் எனக்கு போன் செய்து அவர்கள் காலையில் வீட்டை பூட்டிவிட்டு வழக்கம் போல வேலைக்கு சென்று விட்டதாகவும் மதியம் வந்து பார்த்தபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததாகவும், உள்ளே சென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டு அதிலிருந்து மூன்று பவுன் தங்க செயின் ஒன்றும், இரண்டு பவுன் தங்க செயின் ஒன்றும் காணாமல் போய்விட்டதாக தெரிவித்தார்கள்.

2. பின்பு நான் உடனடியாக வீட்டிற்கு சென்று பார்த்தேன் அக்கம் பக்கம் விசாரித்தேன் எந்த தகவலும் கிடைக்கவில்லை சித்தோடு காவல் நிலையம் சென்று இது சம்பந்தமாக எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் **(புகார் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இரண்டு அல்லது மூன்று மாதம் கழித்து போலீசார் என்னை அழைத்து எங்கள் நகை கிடைத்து விட்டதாக கூறினார்கள் நான் காவல் நிலையம் சென்று பார்த்தபோது காணாமல் போன எங்கள் தங்க செயின்கள் இருந்தது அதை திருடிய நபர்கள் இவர்கள்தான் என்று போலீசார் இரண்டு நபர்களை காண்பித்தார்கள் நான் அவர்களை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள நபர்கள்தான் நான் மேற்படி காவல் நிலையத்தில் பார்த்த நபர்களாகும்.

4. பின்னர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து எங்கள் நகையை பெற்று சென்று விட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க செயின்கள் தான் நான் நீதிமன்றத்தில் மூலம் பெற்று சென்ற நகைகள் ஆகும். **(புகைப்படம் (எண்ணிக்கை – 3) அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

1. பகல் 02.00 மணிக்கு எனக்கு தகவல் கிடைத்ததாக கூறியுள்ள நிலையில் எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் மாலை சுமார் 05.00 மணி இருக்கும். வீட்டின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததையும் பீரோ உடைக்கப்பட்டு இருந்ததையும் போலீசார் புகைப்படம் எடுத்துக் கொண்டார்களா என்றால் எடுத்துக் கொண்டார்கள். காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது என்னுடன் எனது பெற்றோர்கள் மற்றும் தனசேகரன் லட்சுமணன் ஆகியோர்கள் வந்தார்களா என்றால் வந்தார்கள். என்னிடமும் மற்றவர்களிடமும் பெயர் முகவரிகளை போலீசார் பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

3. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.12 17:06:23 +0530

Judicial Magistrate No.III,

Erode.